# ஈரோடு மாவட்ட செய்திகள்



ஈரோடு கொங்கு கலையரங்கில் காலிங்கராயன் கதை நூல் வெளியீட்டு விழா நடந்தது. இதில் விழா மலரை மத்திய இணை அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிட்ட போது எடுத்தபடம். அருகில் எஸ்கேஎம்.மயிலானந்தன், சக்திமசாலா பி.சி.துரைசாமி, நடிகர்கள் சிவக்குமார், சத்யராஜ், விஜயகிருஷ்ணராஜ் மற்றும் செல்லமுத்து, யூ.ஆர்.சின்னசாமி உள்பட பலர் உள்ளனர்.

# நடிகர் சிவகுமாரை போல தலையில் 'டை' அடிக்க முடியலையே

## ஈரோடு விழாவில் சத்யராஜ் ஏக்கம்

ஈரோடு, செப்-6

'காலிங்கராயன் கதை' நூல் வெளியீட்டு விழா ஈரோட்டில் நேற்று நடந்தது. அதில் நடிகர் நடிகர் சத்யராஜ் பேசியது வருமாறு:

இந்த விழாவிற்கு வந்துள்ள பெரியவர்களே பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, அத்தைகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவில் காலிங்கராயன் நூல் வெளியிட்ட பாஸ்கரன் தாயாரை மேடைக்கு அழைத்து அவரை கவுரவிக்க செய்த மத்திய இணை அமைச்சர் சுப்பு லட்சுமி ஜெகதீசனுக்கு எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்து கொள்கிறேன். இவர் கொங்குநாட்டு வீரப் பெண்மணி. தந்தை பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். கலைஞர் வழியில் நடப்பவர்.

### பெட்டிக்கடை கடன்

கோவையில் ராம்நகரில் உள்ள ஒரு வீதியின் பெயர் காலிங்கராயன் வீதி. சீதாராம் ஓட்டல் அருகே ஒரு பெட்டிக்கடை உண்டு. காலேஜ் பசங்க சின்ன தப்பு பண்ற இடம். அங்கு நாயர் கடை இருந்தது. நான் படிக்கிறப்போ அந்த கடையிலே 17 ரூபாய் 50 காசு கடன் வைச்சுருந்தேன். சினிமாவில் சேர்ந்து பல ஆண்டுகளுக்கு அப்புறம்தான் அந்த கடனை திருப்பி கொடுத்தேன். இது காலிங்க ராயன் தெருவில் நான் வாழ்ந்த வரலாறு. காலிங்கராயன் வாய்க்கால் வெட்டினார் என்பதே இந்த நூல் மூலம் தான் தெரிந்தது. ஊத்துக்குளி மாமா கிருஷ்ணராஜ வாணவராயர் எல்லாருக்கும் தெரியும். அவர் வாணவராயர் எனக்கு சினிமாவுல சேருவதற்கு முன்னால பல் சற்று தூக்கி இருக்கும் அதை கிளிப்போட்டு சரி செய்தேன். அப்போது சொல்வேன் .மாமா நீங்க வாணவராயருங்க, அம்மா காலிங்கராயருங்க நான் பல்லவராயருங்கனு வேடிக்கையாக சொல்லு வேன். இந்தியாவில் எம்.பி. தேர்தல் நடந்து. அதில் சோனியா காந்தி வெற்றி பெற்றாங்க. ஆனால் பிரதமர் பதவி வேண்டாம்னுட் டாங்க. அவங்க தியாகம் செய்துள்ளாங்க, அதே போல தியாகம் தான் காலிங்கராயன் செய்திருக்காருங்க. வாய்க்கால் வெட்டிட்டு அதை தன்னுடைய் வாரிசுகள் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லி ருக்காரு. இங்கே பேசியவங்க இப்போ எல்லாம் பாட்டு நல்லா இல்ல. கல்யாணத்தை கட்டிக்கிட்டு ஓடிபோலாமா? இப்படித்தான் இருக்கிறதுனு பேசினாங்க. அதனாலதான் நான் 'உம்மா உம்மம்மான்னு' பாடிட்டா தப்பு கண்டு பிடிக்க முடியாது பாருங்க.

### என்னை சேர்க்க முடியாது

சினிமா கலைஞர்கள் மார்க்கண்டேயர்கள்னு சொன்னாங்க. அப்படின்னா எங்களுக்கு வயசு ஆகிவிட்டதுனு மறைமுகமாக சொல்றாங்க. என்னை அதுல சேர்க்க முடியாது. அண்ணன் சிவக்குமார் டைஅடிச்சுடுவாரு, என்னால் அதுவும் முடியாது. (காரணம், வழுக்கைதலை). நான் என்ன செய்வேன். சினிமாவுல எழுதிக் கொடுக்கிற வசனத்தை அப்படியே பேசுவோம். ஆனா அண்ணன் சிவக்குமார் வரலாற்று சரித்திர ஆண்டு களை கூட இங்கே டிட்டெய்லா சொன்னாரு. பொதுவா அவுரங்க சீப் ஷாஜகான்ல யார் அப்பானு குழம்பிபோவோம். ஆனா சிவக்குமார் படபடன்னு பேசினார். எனக்கு அண்ணன் சிவக்குமார்தான் வாத்தியார். கொங்கு தமிழ் சினிமால இப்போது அதிகம் பேசராங்க. ஆனால் அப்போ எல்லாம் செந்தமிழ் பேசனும்னு சிவாஜி நடித்த பராசக்தி படத்தின் கலைஞரின் கதை வசனத்தை படித்து என்னை வசனம் பேச சொன்னவர் அண்ணன் சிவக்குமார். காலிங்க ராயன் வரலாற்றை படமாக்க வேண்டும் என விஜய்கிருஷ்ணராஜ் கூறினார். படம் ஆக்க வேண்டும் என்றால் ஆயிரம் குதிரைகளை கொண்டு வரவேண்டும். அதிக செலவாகும். ஆனால் பேனாவும் பேப்பரும் இருந் தால் 1000 குதிரை என எழுதி விடலாம் செலவு அதிகம் இல்லை.

### முழு செலவு ஏற்பேன்

எனவே இந்த விழா மூலமாக ஒன்றை தெரிவித்து கொள்கிறேன். காலிங்கராயனுக்கு முழு உருவ சிலை வைத்தால் அதற்கு ஆகும் செலவு தொகை முழுவதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

இவ்வாறு பேசினார்.

### சிவக்குமார்

விழாவில் நடிகர் சிவக்குமார் பேசியதாவது:-

கொங்கு மண்ணின் வரலாறுகள் மங்கி வருவதாக கூறினார்கள். நடிகை கே.பி.சுந்தராம்பாள் இந்த மண்ணை சேர்ந்தவர்தான். சிலோனில் மைக் இல்லாத பத்தாயிரம் பேர் உள்ள கூட்டத்தில் அவரது குரல் கணீர் என ஒலித்தது. காரைக்கால் அம்மையார் படத்தில் அவருடன் சேர்ந்து நடிக்கும் வாய்ப்பு பெற்றேன். மேலும் இப்போது லகரங்கள் சினிமாவில் நடிக்க பெறுகிறோம் என்றாலும் அந்த காலத்திலேயே அவ்வையார் படிப்பிடிப்பு 6 ஆண்டு காலம் நடந்தது. அப்போது ரூ4 லட்சம் ஊதியமாக பெற்றவர் கே.பி. சுந்தராம்பாள் அவர் கள். அவர் காமராஜரின் குருநாதர் சத்திய மூர்த்திக்கு வீடு இல்லை என்ற காரணத்தால் 4 கிரவுண்ட் நிலத்தை வாங்கி கொடுத்த மனம் படைத்தவர். சொந்த குரலில் 250-க்கும் மேற்பட்ட பாடல்கள் பாடியுள்ளார் ஆங்கிலேயே ஆதிக்கத்தை எதிர்த்து போராடிய தீரன் சின்னமலை இந்த மண்ணை சேர்ந்தவர். காலிங்க ராயன் கொங்கு மண்டலத்தை சேர்ந்தவர் இவர்களை பற்றி படைப்புக்களை எழுத்தாளர் பாஸ்கரதாசன் நூலாக வெளியிட்டுள்ளார். இந்த நூலை அனை வரும் வாங்கி காலிங்கராயன் வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள் கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.